## புலத்சிங்ஹல பிரதேச சபை
## களுத்துறை மாவட்டம்

-----------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 02 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 01 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 10 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தின் காரணமாக கணக்காய்வுக்காக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான புலத்சிங்ஹல பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலையை வெளிப்படுத்தியிருக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியம இல 2 இன் படி நிதிக்கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சற்கூற்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக காசுப்பாய்ச்சற் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 கணக்கீட்டுக் கொள்கைகள்**

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதற்காக சபையால் பின்பற்றப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**1.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டின் செலவினப் பேரேட்டின் படி, நூலகப் புத்தகங்களின் கொள்வனவு ரூபா 320,325 தொகையாகவும் நூலகப் புத்தகங்களுக்காகச் செலுத்த வேண்டிய மீதி (கடன்கொடுத்தோர்) ரூபா 100,000 தொகையானதுடன் நூலகப் புத்தகங்களின் கீழ் ரூபா 249,580 தொகை மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 170,745 தொகையான நூலகப் புத்தகங்களின் பெறுமதி குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது வழமையான இருப்புக் கொள்வனவும் ஆயுர்வேத இருப்புக் கொள்வனவுமான முறையே ரூபா 4,724,971 வும் ரூபா 279,635 வும் செலவினக் கணக்கு செலவு வைக்கப்படுவதற்குப் பதிலாக மூலதனச் செலவினத்திற்கு வருமானப் பங்களிப்புக் கணக்கு செலவு

வைக்கப்பட்டிருந்ததுடன் அவ் இருப்பு வழங்கல் ரூபா 4,489,408 வும் ரூபா 224,020 வும் செலவினக் கணக்கு வரவு வைக்கப்படுவதற்குப் பதிலாக மூலதனச் செலவினத்திற்கு வருமானப் பங்களிப்புக் கணக்கு வரவு வைக்கப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான செலவினம் ரூபா 291,178 குறைவாகவும் மூலதனச் செலவினத்திற்கு வருமானப் பங்களிப்பு மீதி அதே தொகையால் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டின் இறுதியில் நிதிக் கணக்கின் (கணக்கு இல. 002) மீதி ரூபா 111,785 குறைவாகவும் பரீட்சை மீதிக்குக் கொண்டுவரப்பட்ட தவறைச் சீராக்குகையில் அப் பெறுமதி தொங்கல் கணக்கு செலவுவைக்கப்பட வேண்டிய போதிலும் திரண்ட நிதியம் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2012 ஆம் ஆண்டின் போது 2013 ஆம் ஆண்டிற்காகக் கிடைக்கப்பெற்று முற்பெறுவனவுக் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருந்த வீத வரித் தொகையான ரூபா 21,560 தொகை, ஏக்கர் வரியான ரூபா 8,944 தொகையும் வீதவரியான ரூபா 6,720 தொகையும் மீளாய்வாண்டின் போது குறித்த வருமானக் கணக்குகளுக்குச் சீராக்கப்பட்டிராததுடன் மீளாய்வாண்டின் போது 2014 ஆம் ஆண்டிற்காகக் கிடைக்கப்பெற்றிருந்த வீதவரியும் ஏக்கருக்கான வரியுமான ரூபா 34,513 தொகையும் ரூபா 4,439 தொகையும் முற் பெறுவனவாகக் கணக்கீடு செய்யப்படாது ஆண்டிற்கான பெறுவனவாகக் கருதப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(உ) 2013 சனவரி மாத கடன்கொடுத்தோர் கொடுப்பனவான ரூபா 1,168,342 தொகை 2012 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் 2012 கடன்கொடுத்தோர் பேரேட்டுக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்த தவறு மீளாய்வாண்டின் போது சீராக்கப்படுகையில் தொங்கல் கணக்கு வரவு வைக்கப்பட வேண்டிய போதிலும் திரண்ட நிதியம் வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஊ) ஓய்வூதியம், ஓய்வூதிய நலன் மற்றும் பணிக்கொடைச் செலவினத் தொகையான ரூபா 600,000 தொகையான வருமானமும் செலவினமும் கணக்கிற்கு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) போக்குவரத்துத் தொடர்பாடல், பயன்பாடுகள் மற்றும் ஏனைய சேவைகள் செலவினமான ரூபா 492,032 தொகை வருமானச் செலவினக் கணக்கிற்கு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மூலதனச் செலவினத் தொகையான ரூபா 114,750 தொகை வருமானச் செலவினக் கணக்கில் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) கடன் அடிப்படையில் உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தால் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 3,178,457 தொகையான கப் வண்டிக்காகச் செலுத்தப்பட வேண்டிய கடன் மீதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஒ) மீளாய்வாண்டின் இறுதியில் தொங்கல் கணக்கின் வரவு மீதி ரூபா 1,486,243 தொகையானதுடன் இது சீராக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 1,900,052 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,670,959 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் இறுதியில் திரண்ட நிதிக் கணக்கு மீதி ரூபா 3,257,778 தொகையான வரவு மீதியாகக் காணப்பட்டதுடன் முன்னைய சில ஆண்டுகளாக திரண்ட நிதிக் கணக்கு மீதி வீழ்ச்சியடைந்த நிலையில் காணப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| ஆண்டு | திரண்ட நிதிய மீதி |
|---|---|
| | ரூபா |
| 2013 | (3,257,777) |
| 2012 | 5,711,256 |
| 2011 | 9,493,445 |

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' |
| (i) | வீதவரியும் வரியும் | 1,534 | 1,178 | 521 |
| (ii) | வாடகை | -- | -- | 547 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 102 | 82 | 42 |

#### 2.3.2 வீதவரி

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை வீதவரி மீதி ரூபா 139,197 தொகையானதுடன் இதில் ரூபா 51,227 தொகை 2014 ஒக்டோபர் 31 இல் உள்ளவாறும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.3 ஏக்கர் வரி**

2011 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்தே நிலவிவரும் ரூபா 83,984 தொகையான ஏக்கர் வரி மீதி கணக்காய்வுத் தினமாகிய 2014 ஆகஸ்ட் 30 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.4 வியாபார வரி**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 168 நிறுவகங்களில் வியாபார வரி ரூபா 204,540 தொகையான நிலுவை மீதி நிலவியதுடன் இதில் ரூபா 1323,620 தொகையான மீதி கணக்காய்வுத் தினமாகிய 2014 ஆகஸ்ட் 30 ஆம் திகதி வரையிலும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.5 கைத்தொழில் வரி**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 72,570 தொகையான கைத்தொழில் வரி மீதியில் ரூபா 46,500 தொகை கணக்காய்வுத் தினமாகிய 2014 ஆகஸ்ட் 30 ஆம் திகதி வரையிலும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.6 நிலைய வரி**

நிலுவையான நிலைய வரி மீதி ரூபா 500,716 தொகையானதுடன் இதற்கு 1988 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து நிலவிவரும் மீதியான ரூபா 11,863 தொகையும் 1989 இற்குரித்தான ரூபா 25,168 தொகையும், 2000 முதல் 2008 ஆம் ஆண்டு வரையான மீதியான ரூபா 463,685 தொகையும் உள்ளடங்கியிருந்தது. இந் நிலுவை மீதிகள் குறித்த ஆண்டுகளின் போது அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமையால் கணக்காய்வுத் தினமாகிய 2014 ஆகஸ்ட் 30 ஆம் திகதி வரையிலும் நிலுவையாகக் காணப்பட்டது.

**2.3.7 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட வியாபார அனுமதிப்பத்திரக் கட்டண மீதியான ரூபா 41,856 தொகையால் 28 வேலைகளிற்கு உரித்தான ரூபா 29,810 கணக்காய்வுத் தினமாகிய 2014 ஆகஸ்ட் 30 ஆம் திகதி வரையிலும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.8 ஏனைய வருமானம்**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், கொழும்பு காணிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து அறவிடப்பட்டிருந்த 2010 ஆம் ஆண்டிற்குரித்தான ரூபா 99,723 தொகையான முத்திரை வருமானம் 03 ஆண்டுகளுக்குள் கோரப்பட்டிராமையால் சபைக்கு வழங்கப்பட மறுக்கப்பட்டிருந்தது.

**2.3.9 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 7,841,003 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 1,546,254 |

**2.4 செயற்பாட்டு.`.முகாமைத்துவத் திறமையீனங்கள்**

**(அ) நட்டங்களும் இழப்புகளும்**

2009 ஆம் ஆண்டின் போது சபையால் உள்நாட்டுக்கடனும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் தொகையில் தவணைப்பணம் 2011 ஆம் ஆண்டிலிருந்து செலுத்தப்பட வேண்டியதாகக் காணப்பட்ட போதிலும் அவ்வாண்டு முதல் செலுத்தப்படாது 2013 ஆம் ஆண்டு முதல் கொடுப்பனவு ஆரம்பிக்கப்பட்டிருந்த காரணத்தால் அந் நிறுவகத்தால் 2014 யூலை மாதத்தில் ரூபா 20,493 தொகையான தண்டப்பண வட்டி அறவிடப்பட்டிருந்தது.

**(ஆ) ஓய்வூதிய நிதியத்திற்கான தவணைப்பணக் கொடுப்பனவு**

ஓய்வூதியத் திணைக்களத்தின் மூலம் 2013 திசெம்பர் மாதம் அனுப்பிவைக்கப்பட்டிருந்த ஓய்வூதியப் பங்களிப்பு, பட்டியலின் படி 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்பட வேண்டிய மீதி ரூபா 3,049,837 ஆகக் காணப்பட்டது. 2013 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் ஓய்வூதியக் கடன்கொடுத்தோர் ஏற்பாடாக ரூபா 700,000 மாத்திரமே காண்பிக்கப்பட்டிருந்தமையால் ஓய்வூதிய நிதியத்திற்குச் செலுத்தப்பட வேண்டியிருந்த ரூபா 2,349,837 தொகையான மீதி கணக்கீடு செய்யப்பட்டிராமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**(இ) கைவிரலடையாள இயந்திரக் கொள்வனவு**

2008 பெப்ரவரி 26 ஆம் திகதி ரூபா 123இ500 இற்கு கைவிரலடையாள இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்ட நாள் முதல் கணக்காய்வுத் தினமாகிய 2014 செப்தெம்பர் 29 ஆம் திகதி வரையிலும் குறித்த வருகை மற்றும் வெளிச்செல்லல் நேரப் பதிவுகளின் அச்சீட்டுப் பிரதிகள் கைவிரலடையாள இயந்திரத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) 2013 ஏப்ரல் 19 ஆம் திகதி வரையிலும் இயந்திரம் செயலிழந்திருந்தமையால் திருத்தவேலைகளுக்காக வழங்கிய நிறுவகத்திற்கே ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் 2014 ஆகஸ்ட் மாதம் வரையிலும் குறித்த திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு இயந்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) ஊழியர் கடன்**

சேவையை விட்டுச் சென்ற, ஓய்வுபெற்ற மற்றும் மரணித்தல் போன்ற காரணங்களால் சுகாதார ஊழியர் மற்றும் எழுதுவினைஞர்களாக கடமையாற்றிய 7 ஊழியர்களிடமிருந்து 2011 ஆம் ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 170,496 தொகையான கடன் மீதி 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் அறவிடப்படாதிருந்ததுடன் தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு இத் தொகையை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.5 பெறவேண்டிய கணக்குகள்**

பல வருட காலமாக முன்கொண்டுவரப்படும் ரூபா 17,798 தொகையான மின்சார களஞ்சிய பெறவேண்டிய மீதி மற்றும் ரூபா 855,463 கூட்டுத்தொகையான வீதி விளக்கு மானிய மற்றும் சம்பள மீளளிப்புப் பெறுவனவுகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீடு
(இ) வருமானக் கட்டுப்பாடு